# ஐயமும்! தெளிவும்!!

***ஐயம் :*** எனது குழந்தைப் பருவத்தில் ஒரு பெண் எனக்கு பாலூட்டி இருக்கிறார். அதே பெண் என் உறவினரல்லாத அடுத்த வீட்டுப் பெண் குழந்தைக்கும் பாலுட்டி இருக்கிறார். பால் கொடுக்கப்பட்ட நானும் அடுத்த வீட்டுப் பெண்ணும் இப்போது பருவ வயதை அடைந்துள்ளோம். நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று ஒரு நண்பர் சொல்கிறார். இது சரியா? தவறா? என்பதை குர்ஆன், ஹதீஸ் விளக்கங்களுடன் தெரிவிக்கவும்.

***S.K.*** *நிஃமெத்துல்லாஹ், சென்னை.*

***தெளிவு :*** உங்கள் திருமணத்தை திருகுர்ஆனின் 4:23 வசனம் தடை செய்கிறது.

> **உங்களுக்கு (மணமுடிக்க) விலக்கப்பட்டவர் கள் .... உங்களுக்குப் பாலூட்டிய தாய்மார் களும், உங்கள் பால்குடி சகோதரிகளும் ... ஆவார்கள்"** (மணம் முடிக்க விலக்கப்பட்வர்கள் வேறு யார் யார் என்பதை 4:23 வசனத்தை முழுமையாகப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

மேற்கண்ட இறைக்கட்டளையை அறியாமல் பால்குடி சகோதரிகளைத் திருமணம் செய்து கொண்டவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை கீழே காண்பிக்கப்பட்டுள்ள ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

> **"நான் உம்மு யஹ்யா பின்த்து அபீ சிஹாபை திருமணம் செய்திருந்தேன். ஒரு கருப்பு நிற அடிமைப் பெண் வந்து, 'நான் உங்கள் இருவருக்கும் பாலூட்டியிருக்கிறேன்" என்று எங்களிடம் தெரிவித்தார். இந்தச் செய்தியை நான் நபி(ஸல்) அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் (முகத்தைத் திருப்பிக் கொண்டு) என்னை அலட்சியம் செய்தார்கள். நான் என் இருப்பிடத்திலிருந்து விலகி(அவர்களுடைய முகம் இருக்கும் பக்கம்) சென்று, அவர்களிடம் அதை (மறுபடியும்) கூறினேன். "அவள் உங்கள் இருவருக்கும் பாலூட்டியிருப்பதாக வாதிட்டுக் கொண்டிருக்கும் நிலையில் எப்படி (நீங்கள் இருவரும் கணவன் மனைவியாக வாழ முடியும்)?"** என்று கேட்டார்கள். என்னை அவளுடன் சேர்ந்து வாழக்கூடாது என்று விலக்கினார்கள்.

*அறிவிப்பவர் : உக்பா பின் ஹாரிஸ்(ரழி),*

*நூல் : புகாரீ (ர.அ.க. பாகம் 3, ஹதீஸ் எண் 2659)*

------------------------------------------------

***ஐயம் :*** கடவுள் படைத்த படைப்பினங்களில் அழகான படைப்பு எது? ***K.R.*** *செந்தில் நாதன், திருச்சி.*

***தெளிவு :*** அழகை நிர்ணயிக்க பல அளவுகோல்கள் மனிதர்களிடம் இருக்கின்றன. மனிதர்களில் அழகானவர்களை நிர்ணயிக்க நிறத்தில் கறுப்பா, சிவப்பா, மாநிறமா என்றும், உடல் அமைப்பில் உயரமா, குட்டையா, நடுத்தமா என்றும், உருவ அமைப்பில் தடித்தவரா, மெலிந்தவரா, நடுத்தரமானவரா என்றும், முக அமைப்பில் கண்கள், மூக்கு, காதுகள், உதடுகள், பல்வரிசை, உதடு, தலைமயிர் ஆகியவைகளைக் கொண்டும் இன்னும் பிற பல அம்சங்களைக் கொண்டும் முடிவு செய்யப்படுகின்றன. ஒருவரின் அளவுகோல் மற்றவரிடமிருந்து மாறுபடவும் செய்யலாம். உதாரணமாக சிலர் கறுப்பு நிறத்தினரை விரும்பலாம். சிலர் வேறு நிறத்தினறை விரும்பலாம். இவ்வாறாக நிர்ணயிக்கும் அளவுகோல் மாறுபடுகின்றன.

பரந்து விரிந்த வானத்தையும், கடலின் அழகையும் ரசித்து வருகின்றோம். மானின் அழகில் மனதைப் பறிகொடுத்து விடுகிறோம். சிங்கத்தின் கம்பீரத்தில் வெளிப்படும் அழகை ரசித்து வருகின்றோம். குதிரையின் பிடரி மயிரின் அழகைக் கண்டு வருகிறோம். நம்மைப் பார்த்து கண்சிமிட்டும் பூனையின் அழகும் அழகே. படம் எடுத்து ஆடும் நாகத்தைக் கண்டு பயப்படுகிறோம். படமெடுத்த பாம்பின் அழகை புகைப்படத்தில் பார்த்து ரசிப்பவர்களும் உண்டு. நாம் அணியும் ஆடைகள், காலணிகள் நம் மனதிற்குப் பிடித்தவாறு அழகாய் தேர்வு செய்கின்றோம். **“கண்ணுக்கு விழி அழகு …”** எனத் தொடங்கி அழகானவற்றையெல்லாம் சினிமா கவிஞன் ஒருவன் பட்டியலிட்டுத் தந்துள்ளான். மயிலின் தோகை விரித்தாடலுக்காக மயிலையும் குரலுக்காக குயிலையும், கலருக்காக வண்ணத்துப் பூச்சி மற்றும் பறவைகளையும் அழகானவைகளாகக் கருதி வருகின்றோம்.

அவரவர் ரசனைக்கேற்ப அழகு தேர்வு செய்யப்படுகிறது. படைப்பினங்கள் ஒவ்வொன்றின் உருவத்தில், நிறத்தில், நடையில், ஓட்டத்தில், ஆட்டம் பாட்டத்தில், உறக்கத்தில், உண்ணுதலில், பேச்சில் என்று பற்பல படைப்பினங்களின் பற்பல விஷயங்களிலிருந்து ஒவ்வொருவரின் ரசனைக்கேற்ப அழகு தேர்வு செய்யப்படுகிறது.

எனவே படைப்பினங்களில் அழகான படைப்பு எது என்பதை அவரவர் ரசனைக்கேற்ப அவரவரே முடிவு செய்து கொள்ள வேண்டும் என்பதே தங்களின் வினாவிற்கான விடை. அழகு பற்றி கூடுதல் விளக்கங்களை இன்னும் காண்போம்.

ஒரு பொருளைப்பற்றிய எல்லா விவரங்களும் அப்பொருளைத் தயாரித்தவனே நன்கு அறிவான் அல்லவா**?** அதே போல எல்லாப் படைப்பினங்களையும் படைத்த அகிலங்களின் இறைவன் அல்லாஹ், உலக மக்களுக்கு வழிகாட்ட இறக்கி அருள் புரிந்த திருகுர்ஆனில் அழகிய படைப்பினமாக யாரைக் குறிப்பிடுகிறான் என்பதை இங்கு காண்போம். **“தீர்ப்பு செய்பவர்களில்லாம் அல்லாஹ் மிக மேலாகத் தீர்ப்பு செய்பவன்”** (அல்குர்ஆன் 95:8) என்று படைத்தவன் தன்னைப் பற்றிக் குறிப்பிடுகிறான். எனவே அவனது தீர்ப்பை அறிந்து கொள்வது அவசியமாகிறது.

> **“அல்லாஹ்தான் உங்களுக்கு இப் பூமியைத் தங்குமிடமாகவும், வானத்தை ஒரு விதானமாகவும் உண்டாக்கியிருக்கிறான். மேலும், அவன்தான் உங்களை (மனிதர்களை) உருவாக்கி, உங்கள்**

**உருவங்களை அழகாக்கி, சிறந்த ஆகார வசதிகளையும் அளித்தான். அவன்தான் அல்லாஹ்; உங்களுடைய இறைவன்; அகிலத்தாருக் கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்மிக பாக்கியமுடையவன்".** *அல்குர்ஆன் 40:64*

**"வானங்களையும், பூமியையும் அவன் சத்தியத்துடன் படைத்துள்ளான். மேலும் உங்களை உருவாக்கி, உங்கள் உருவங் களையும் அழகாக்கினான்; அவனிடம் தான் மீளுதல் இருக்கிறது."** *அல்குர்ஆன் 64:3*

உருவங்களில் மனிதர்களை அழகாக்கியுள்ளதாக மேற்கண்ட இறைவசனங்களில் அல்லாஹ் தெரிவித்திருக்கிறான். ஆனால் நடைமுறையில் அருவருப்பான மனிதர்களையும் நாம் கண்டு வருவது கண் கூடான உண்மை. **'உருவங்களை அழகாக்கியுள்ளதாக'** அல்லாஹ் கூறுவதன் பொருள் என்ன என்பதை திருகுர்ஆனின் 82:7,8 வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. அந்த வசனங்கள் இரண்டையும் நன்கு கவனியுங்கள்.

**"(அல்லாஹ்வாகிய) அவன்தான் உன்னைப் படைத்து, உன்னை ஒழுங்குபடுத்தி, உன்னைச் செவ்வையாக்கினான்".**

*அல்குர்ஆன் 82:7*

**"எந்த வடிவத்தில் அவன் விரும்பினானோ, (அதில் உன் உறுப்புக்களைப்) பொருத்தினான்".**

*அல்குர்ஆன் 82:8*

மனிதனை அல்லாஹ் படைத்து, அவன் விரும்பியவாறு மனிதனுடைய உருவத்திற்குத் தேவையான உறுப்புக்களாகிய தலை, கண், காது, மூக்கு, கைகள், கால்கள், இதயம், ஈரல், குடல் என இன்னும் பிற உறுப்புகள் அனைத்தையும் அதனதன் இடத்தில் அவைகளை ஒழுங்குப்படுத்திப் பொருத்தி மனிதனை அழகாக ஆக்கியுள்ளான் என்பதை மேற்கண்ட இருவசனங்களிலிருந்தும் தெளிவாக அறிய முடிகிறது. **'உருவங்களை அழகாக்கியுள்ளான்'** என்பது உறுப்புக்களை அதனதன் இடத்தில் பொருத்தியதையே இங்கு குறிப்பிடப்படுகிறது.

ஆனால், உண்மையினையே **'அழகு எது?'** என்பதை கீழ்க்கண்ட 3 வசனங்கள் தெளிவு படுத்தியிருப்பதை கவனிக்கவும்.

**"திடமாக நாம் மனிதனை அழகிய அமைப்பில் படைத்தோம்" (95:4); பின்னர் (அவன் செயல்களின் காரணமாக அவனைத் தாழ்ந்தவர்களில் மிகவும் தாழ்ந்தவனாக் கினோம் (95:5); எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களைத்தவிர (ஏனையோரைத் தவிழ்ந்தவர்களாக்கினோம்).** *அல்குர்ஆன் 95:6*

மனிதன் அவனது செயல்களின் காரணமாகத் தான் தாழ்ந்தவனாகவோ அல்லது உயர்ந்தவனாகவோ ஆகிறான் என்று மேற்கண்ட வசனங்கள் கூறுவதிலிருந்து **'அவனை திடமாக அழகிய அமைப்பில் படைத்தோம்'** எனக்கூறப்பட்டிருப்பது நாம் நினைப்பது போன்ற அழகில் அல்ல, மாறாக மனிதனின் குவாலிட்டியை அதாவது பண்பு, குணம் இவைகளைப் பற்றியது என்பது நிச்சயமாகிறது.

ஆக! இறைவனின் பார்வையில் படைப்பினங்களில் அழகாக அதாவது குவாலிட்டி ஆக படைக்கப் பட்டிருப்பது மனிதர்களைத்தான் என்பது தெளிவாகிறது.

மனிதனின் இந்த உயரிய பண்பை சிறப்பிக்கும் விதமாக, 'அரபி அஜமியை (அரபி அல்லாதவனை) விட சிறந்தவன் அல்ல; அஜமி அரபியைவிட சிறந்தவன் அல்ல; உங்களில் சிறந்தவர் இறையச்சம் உடையவரே!' என்று இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களும் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

இறுதியாக நாம் எண்ணிக் கொண்டிருக்கும் **'அழகு'** பற்றி, இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தெரிவித்த செய்தி (ஹதீஸ்) ஒன்றையும் முன் வைக்கின்றேன்.

> **"எவனது உள்ளத்தில் அணுவளவு பெருமை குடிகொண்டுள்ளதோ, அவன் சுவர்க்கம் செல்லமாட்டான்"** என இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஒருவர், **"மனிதன் தன் ஆடை அழகாய் இருப்பதையும், தன் காலணிகள் அழகாய் இருப்பதையும் விரும்புகிறானே? (அது பெருமையா?)"** என்று வினவினார். அதற்கு இறைத்தூதர்(ஸல்) அவர்கள், **"நிச்சயமாக அல்லாஹ் அழகானவன் அவன் அழகை நேசிக்கிறான். ஆனால் பெருமை என்பது உண்மையை மறுப்பதும், (பிற) மனிதர்களை இழிவாக எண்ணி (தனக்குத்தானே) செருக்கடைவதும் ஆகும்"** என்று பதிலளித்தார்கள்.

*அறிவிப்பவர் : இப்னு மஸ்வூத்(ரழி),*
*நூல்கள் : முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ*

ஆடைகளிலும், காலணிகளிலும், படைப்பினங்களின் பல அமைப்புக்களில் அழகைத் தேடக்கூடிய நாம், இவை எல்லாவற்றிற்கும் மேலாக படைத்தவனான **'அல்லாஹ் அழகானவன்'** என்பதை மறுந்து விடக்கூடாது.

-----------------------------------------------

***ஐயம் :*** எனது மகனும், மகளும் மார்க்கத்தில் நல்ல அமல்கள் செய்து கொண்டிருந்தால் அதன் பலன் அவர்களுக்குக் கிடைப்பதுபோல எனக்கும் கிடைக்கும் என்பது உண்மையா?

***O.M.*** *தவக்கல்ஹுஸைன், மதுரை.*

***தெளிவு :*** தங்களது பிள்ளைகளை மார்க்க அமல்களில் ஈடுபடுத்தியதற்காக தங்களுக்கு இத்தனை பெரிய நற்பேறு கிடைக்கின்றன. கீழ்க்காணும் ஹதீஸ் இதனை தெளிவுபடுத்தியிருப்பதைப் பாருங்கள்.

**'மனிதன் மரணித்த பின் அவனுடைய செயல்களும் முடிவுற்று விடுகின்றன. ஆனால் 3 செயல்களைத்தவிர (இந்த 3 செயல்களும் முடிவுறுவதில்லை) :**

**1. தொடர்ந்து நடந்து வரக்கூடிய தர்மம். 2. மக்கள் பயனடைந்து வரும் கல்வி (அதவது அவன் கற்றுக் கொடுத்தக்கல்வி). 3. அவனுக்காகப் பிரார்த்திக்கும் அவனுடைய நல்ல வழித்தோன்றல்கள்'** என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி),*

*நூல்கள் : முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ, நஸயீ*

***ஐயம் :*** நல்ல அமல்கள் செய்து கொண்டிருந்தால், நமது பாவங்கள் கரைந்து விடுமா? *அபூ ஃபாத்திமா, சேலம் 1.*

***தெளிவு :*** ஆம் எனக்கூறுகிறது கீழே காட்டப்பட்டுள்ள ஹதீஸ்.

**"அல்லாஹ்வின் தூதரே! மதீனாவின் மூலை ஒன்றில் நான் ஒரு பெண்ணுடன் சரஸசல்லாபம் எல்லாம் செய்து அவளுடன் வீடு கூடாது விட்டு விட்டேன். இதோ (இப்போது) நான் (உங்கள் முன்னிலையில்) இருக்கிறேன். என் விஷயத்தில் தாங்கள் தீர்ப்பளியுங்கள்" என்று ஒருவர் வந்து கூறினார். அப்பொழுது உமர்(ரழி) அவர்கள், 'அல்லாஹ் உம்மை மறைத்து விட்டிருக்கும் பொழுது நீரும் மறைத்து விடுவதுதானே' என்று கூறினார்கள். ஆனால் நபி(ஸல்) அவர்கள் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தார்கள். எனவே அம்மனிதர் எழுந்து நடக்கலானார். அப்பொழுது நபி(ஸல்) அவர்கள், அம்மனிதரை அழைத்து வரச்செய்து அவரிடம்,"(காலை மாலை ஆகிய) பகலின் இருமுனைகளிலும், இரவின் பகுதியிலும் நீங்கள் தொழுகையை நிலைப்படுத்துவீராக; நிச்சயமாக நற்செயல்கள், தீச்செயல்களைப் போக்கி விடும். (இறைவனை) நினைவு கூறுவோருக்கு இது நல்லுபதேசமாக இருக்கும்" என்று கூறப்பட்டுள்ள 11:114வது வசனத்தை ஓதிக்காட்டினார்கள். அப்பொழுது ஒருவர், 'அல்லாஹ்வின் தூதரே! அது அவருக்கு மட்டுமா உரியது?' என்று கேட்டார். 'இல்லை! மனிதர்கள் அனைவருக்குமே அது உரியதுதான்'** என்று நபி(ஸல்) அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

*அறிவிப்பவர் : இப்னு மஸ்வூத்(ரழி),*

*நூல்கள் : புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி*